627

ARYA DHARMAM REGD. No. M. 2913
TAMIL WEEKLY

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் செலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணா
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-௵ ஆனி-௴ 21௳ 1940-௵ ஜூலை௴ 4௳ | ஸ-27

ஸுபாஷ்போஸ் கைது செய்யப்பட்டார்

ஸ்ரீமான் ஸுபாஷ் சந்திரபோஸ் இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி 2௳ யன்று மாலை கல்கத்தாவில் கைது செய்யப்பட்டார். அவர் அலிப்பூர் ஜயிலில் வைக்கப் பட்டிருக்கிறார்.

வைஸ்ராய் காந்தி பேட்டி

பலன் ஒன்று மில்லையாம். கார்யக்கமிட்டி கூட்டம்

ஸ்ரீமான் காந்தி வைஸ்ராயை பேட்டி கண்டு 3 மணி நேரம் பேசினாராம் இதில் இந்தியராஜீய நிலைமை விஷயமாக அபிவிருத்தி ஏற்படும்படி எவ்வித பிரயோஜனமும் ஏற்பட வில்லையாம்.

டில்லியில் அவஸரமாக கார்யக்கமிட்டிக் கூட்டம் நடந்து வருகிறது. ஹிந்து மஹா ஸபைத்தலைவர் ஸ்ரீமான் ஸவர்க்காரும் வைஸ்ராயை பேட்டிகாண அழைக்கப் பட்டிருக்கிறார். ஸ்ரீ ஆனேயும் அழைக்கப் பட்டிருக்கிறார்.

ஸ்ரீ ஸத்ய மூர்த்தியின் பதவிஏற்பு ஆசை

காந்திக்கு தந்தி!

ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி காந்திஜிக்கு ஒரு அவஸரத்தந்தி அனுப்பியுள்ளார் அதில் காங்கிரஸ்ஸானது மீண்டும் மந்திரிபதவி யேற்று மாகாண ஆக்ஷியை நடத்த வேண்டு மென்றும் மத்யகவர்ன்மெண்டில், தேசீய ஸர்க்கார் ஏற்பட வேண்டு மென்றும் இந்தியா சட்டஸபை பஹிஷ்காரத்தை எடுத்துவிட வேணு மென்றும், உடனே இதற்கு வழி செய்யவேணு மென்றும் அந்த தந்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

பம்பாய் மதுவிலக்கு மறைந்து விடுமா?

ஹைகோர்ட் தீர்ப்பு

பம்பாயில் காங்கிரஸ் ஸர்க்கார் மதுவிலக்கு விஷயமாக ஓர் உத்திரவு பிறப்பித்து மதுவிலக்கை அநுஷ்டானத்திற்கு கொண்டு வந்தார்கள். அந்த உத்திரவு சட்டப்படி செல்லாதென்று ஹை கோர்ட் தீர்ப்புக் கூறியதன்பேரில் கவர்னர் ஓர் அவஸரச்சட்டம் பிறப்பித்த விஷயம் ஏற்கனவே வெளியாகியிருக்கிறது. அப்காரி சட்டத்திருத்தம் போன்ற விஷயம் ஸமஷ்டி ஸர்க்காரின் அதிகாரத்திற்கு உள்பட்டதாகையால் அதில் பிரவேசித்து மாகாண கவர்னர் சட்டமியற்ற அதிகாரமில்லையென்று இப்போது பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்புச் சொல்லிவிட்டது. ஆதலால் பம்பாய் மதுவிலக்கு உத்திரவு மறைந்து போகும் நிலைமைக்கு வந்து விட்டது.

ஸர்வ கலாசாலையில் மத போதனை வேண்டும்.

ஸர். கே. வி. ரேட்டி விருப்பம்.

அண்ணாமலை ஸர்வகலாசாலை வைஸ்சான்ஸலரான ஸர். கே. வி. ரெட்டி அங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில், "அண்ணாமலை ஸர்வ கலாசாலையானது சிதம்பர க்ஷேத்திரத்தில் அமைக்கப்பட்டிருப்பதாலும், அதில் 95 விதம் ஹிந்துமாணவர்களே வாசிப்பதாலும், மேற்படி கலாசாலையில் மதபோதனை அவச்யம் இருக்கவேண்டுமென்றும், அதற்கான முயற்சி சீக்கிரத்தில் செய்யப்பட வேண்டுமென்றும் கூறினார்.

கராச்சி ஹோட்டல் பிரவேச நிராகரிப்பு

கராச்சி கார்ப்போரேஷன் ஹோட்டல்களிலும், க்ஷவர ஸலூன்களிலும் தீண்டாதார் பிரவேசிக்கும்படி செய்த தீர்மானத்தை 'ஸிந்து' கவர்மெண்டானது ஸஸ்பெண்டு செய்து விட்டது. தன்னுடைய உத்திரவில்:— லைஸென்ஸ் கொடுக்கும் காலத்தில் ஹோட்டல்காரர்கள் மீதோ, ஸலூன்காரர்கள் மீதோ, இவ்வித நிர்பந்தத்தை ஏற்படுத்த கார்ப்போரேஷனுக்கு அதிகாரம் கிடையாது. இந்த முனிஸிபல் சட்டத்தை மீறுபவர்களை தண்டிக்கவும் கார்ப்போரேஷனுக்கு அதிகாரம் கிடையாது. என்று கூறுகிறது.

கோவிலூர் வர்ணாஸ்ரம ஸ்வாராஜ்ய ஸங்கம்

போதக் கூட்டம்

19—6—40௳ மாலை 7மணிக்கு கோவிலின்முன் ஓர் பொது கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ மகேஸ்வர நந்தகிரி ஸ்வாமிகள் தலைமை வகித்தார்கள். வர்ணாஸ்ரம முறையைப் பற்றி வெகு அழகாக தலைவர் பேசினார்கள். பின் இவ்வூர் சங்கத்தலைவர் ரெங்கனாத சாஸ்திரிகள் பேசியதும் நிர்வாகஸ்தர்கள் புதியதாக தேர்ந்தெடுக்கப் பட்டனர்

தலைவர்:— வி. வி. ரங்கனாத சாஸ்திரிகள்

உபதலைவர்கள்:— கா. சதாசிவ குருக்கள், கே. கணபதி அய்யர், காரியதரிசிகள் டி. எஸ். கோபாலசாமி அய்யர், கே. எ. ராமசாமி அய்யர், பொக்கிஷதார் கா. சுந்தரகுருக்கள்

இன்னும் ஆறு பேர் அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டபின் சபை காரியதரிசி கே. எ. ராமசாமியால் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது

(ஓ. கி.)

திருக்குறுங்குடி கோயில் தாவா

ஸ்கீம் ஏற்படுத்த முடிவு

திருநெல்வேலி ஜில்லாவில் பிரபல திவ்ய க்ஷேத்ரமான திருக்குறுங்குடி தேவஸ்தானத்தை நோட்டிபிகேஷன் செய்து கவர்மெண்ட் நேர் மேல் பார்வைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென சென்னை எண்டோமெண்ட் போர்டில் ஓர் தாவா நடைபெற்றது முதலில் நோட்டிபிகேஷன் செய்ய வேண்டு மென்று மூன்றில் 2 கமிஷனர்கள் அபிப்ராயப் பட்டதின் பேரில் கோயில் டிரஸ்டி ஜீயர் அப்பீல் செய்தார். அதன் மேல் 4 பேர் சேர்ந்த போர்டு விசாரணை செய்து நோட்டிபிகேஷன் வேண்டாமென்றும் ஒருஸ்கீம் போட உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டு மென்றும் அபிப்ராயப்பட்டு உத்திரவு செய்திருக்கிறார்கள்.

(ந வி கி)

உடனே தேவை

தமிழ் நன்றாய் எழுதப்படிக்கத் தெரிந்த டிப்டி இன்ஸ்பெக்டர்கள் தேவை. மாதச் சம்பளம் ரூ. 20—2—40 கொடுக்கப்படும். முன் பணம் ரூ 60. கட்டவேண்டும். பூரா விபரம் தெரிந்து கொள்ள 1½ அணா ஸ்டாம்புடன் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

M. P. கிருஷ்ணமூர்த்தி
இன்ஸ்பெக்டர். M. L. P. I. Co, Ltd.
611. தாராசுரம், (தஞ்சாவூர் ஜில்லா.)

தற்கால பிராமண ஸமூஹத்தின் நிலை

உலகத்தில் எவ்வளவுக்கெவ்வளவு கௌரவதையுடன் வாழ்ந்து வந்ததோ அவ்வளவுக்கவ்வளவு உலகத்தாரால் இகழும் நிலைமையிலிருப்பதின் காரணத்தை நாம் இன்னும் சிந்திக்கவேண்டாமா.

உலகத்தில் எந்த சமூகமும் தங்கள் சமூக முன்னேற்றத்தை நாடி சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டு சங்கங்களை வளர்ச்சி செய்து கொண்டு தங்களுடைய சங்கங்களின் குறைகளை அப்போதைக்கப்போது நிவர்த்தித்துக் கொண்டும் வரும் முறையை நம்முடைய பிராமண சமூகம் மட்டிலும் ஏன் பின்பற்றக்கூடாது. தற்காலம் நமது ராஜாங்கத்தில் படித்து பாஸ் செய்தவர்களுக்கு உத்தியோகமென்பது போய் வகுப்புவாதப்பேயின் ஆர்பாட்டத்தால் உத்தியோகத்துக்கும் ஜாதி முறை குறுக்கிட்டு புத்திசாலித்தனத்துக்கும் வேலைக்கும் சம்பளமில்லாமல் ஜாதி விகிதாசாரப் பிரகாரம் உத்தியோகம் பிரித்துக் கொடுப்பதென்ற முறைவந்ததுடன் சர்க்கார் காரியாலயங்களில் ஏற்படும் உத்தியோக காலிஸ்தானங்களுக்கு பிராமணர்கள் நீங்கலாக மற்றஜாதியார்களுடைய அப்ளிகேஷன்களையே ஏற்றுக்கொள்ளக்கூடு மென்றும் சர்க்குலர்கள் வந்தும் கூட, நம் சமூகத்தில் படித்த அநேக இளைஞர்கள் வேலையில்லா திண்டாட்டத்திற்கு உள்ளாவதை நிதர்சனமாய்ப் பார்த்தும்கூட இன்னமும் ஒன்றுக்கும் உதவாத இந்த ஆங்கிலப்படிப்பின் மோகம் நம் பெற்றோர்களை விட்டபாடில்லை. ஆகையால் இந்தபிழைப்புக்கு வழியில்லாததும்கூட. ஜாதிதர்மத்தையும் குல தர்மத்தையும் அழித்து வரும் ஒன்றுக்கு முதவாத இந்த ஆங்கில பாஷையின் நிமித்தமான செலவையாவது குறைதுக் கொள்வது முக்கிய அவசியமென்பதை நமது சமூகத்திலுள்ள ஒவ்வொரு பெற்றோர்களும் கட்டாயம் உணர்ந்து இது விஷயமாய் செலவு செய்யும் பணத்தைக் கொண்டு நமது குழந்தைகளின் பிற்கால வாழ்வுக்கு வேணுமென்ற அநேகம் கலைகளை பொருள் செலவு அன்னியலேயே செய்துவைத்து இந்த ஆங்கிலப்படிப்பு தேர்ச்சியில்லாமலே நமது தேசத்தில் இதர வகுப்பார்களான மார்வார்டிகளென்ன. நகர வைசிய சமூகமென்ன, சௌராஷ்டிர சமூகமென்ன. நாடார்கள் சமூகமென்ன; இதுகளெல்லாம் தாங்கள் நல்ல ஸ்திதியில் இருப்பதுடன்கூட தங்களுடைய சமூகங்களுக்கு விசேஷ உபகாரங்கள் செய்துவருவதை நாம் பார்த்தும்கூட ஏன் நமது சமூகமும் அவர்களது வழியையே பின்பற்றி விசேஷ அதிர்ஷ்டங்களை அடைய முடியாதா என்ற விஷயத்தை நம்முடைய சமூகத்திலுள்ள தலைவர்கள் கூடி பரிசீலனை செய்து அதற்கு ஒரு முடிவை அவசியம் தேட வேண்டியது அவர்களது கடமைகளில் ஒன்று.

ஆகையால் நாம் முன்னதாக இந்த குமாஸ்தா உத்யோகங்களுக்குள்ள படிப்பில் அதிக முன்னேற்றமடைந்து அதிலும் இரண்டொருவர்கள் நமது சமூகத்தில் அதிர்ஷ்டவான்களாக இருந்திருப்பதை நினைத்துக்கொண்டே தற்காலத்தில் Cross Worbs Puzzles ஆனந்தவிகடன் போட்டிப் பந்தயத்திலும் பணம் செல்வு செய்து ஏமாறுவதுபோல் உத்தியோகம் நிச்சயமில்லாத இந்த ஆங்கிலவித்தைக்கு இனி மேலாவது நமது சமூகம் பொருள் விரயம் செய்யாமல் இருப்பது மேன்மை என்ற நிச்சயத்துக்கு வரும்படியாக ஆங்காங்கு நமது சமூகத்தார்களுக்கு தகுந்த பிரசாரம் செய்து வருவது முக்கியமான கடமை. இந்த ஆங்கில கல்வியால் நாம் அடைந்திருக்கும் ஈன ஸ்திதியை அறியாத பல நமது அன்னிய சகோதரர்கள் நமது சமூகம் விசேஷ கௌரவத்தையுடன் வாழ்வது போலும் தங்களுக்கு இந்த வாழ்வு கிடைக்கவேணுமென்று அவர்கள் விரும்புவதும் நமது காருண்ய கவர்மெண்டார் அவர்களுக்கு அனுக்ரகிப்பதும் நமது சமூகத்தின் பாக்கிய மென்றே நாம் கருதவேண்டும். இந்த ஆங்கில வித்தையும் அதனாலேற்படும் அற்பமான உத்தியோகமும் நம் சமூகத்தின் உன்னதஸ்திதியை மிகவும் தாழ்மைப்படுத்தி ஜாதி தர்மம் குலதர்மம் முதலானது அழிந்த பலனை இன்று நமது சமூகம் நன்றாய் அனுபவித்து வருகிறது.

நமது சமூகத்தில் பெண்ணைப் பெற்றவர்கள் அனுபவித்து வருகிற கஷ்டமும் முதலில் இந்த ஆங்கில வித்தையால் நாமடைந்த நன்மை. அதாவது முன்பு பந்துப் பிரியங்களும் ஸ்வஜனங்களிடத்தில் விடாத சம்பந்தங்களும் பரஸ்பர அனுராகமு மிருந்ததுபோய் சந்தையில் மாடு பிடிப்பதுபோல் விவாஹங்களும் சம்பந்திகளுக்குள் முன்பினறியாத முறையிலேற்படும் சம்பந்தத்தால் பரஸ்பரம் சம்பந்திக்குள் கலகங்களும் பொய்களும் மலிந்து விவாஹ நிமித்தமாய் செலவழித்து சமூகங்களழிந்து மறைந்து வருகின்றன. இனிமேலும் இந்த சமூகமானது தன்னுடைய சமூக முன்னேற்றத்துக்கு பாடு படாமல் வாளாயிருக்குமானல் கூடிய சீக்கிரத்தில் இந்த சமூகம் ரொம்ப ஹீன ஸ்திதிக்கு வந்துவிடக் கூடியதால் நாம் ஒவ்வொருவரும் கிராமம் தவறாமல் பிராமண சமூகத்தின் கட்டுப்பாடுகள் சமூகத்திற்கு தேவையுள்ள வியாபாரங்களை அச்சமூகமே நடத்தி வரும்படியாக ஏற்பாடுகளைச் செய்வதில் தாமதம் செய்யாமல் செய்வதை பிறர்களிடம் ஜாதி அபிமானமென்று நினைப்பார்களோ என்று பயப்படாமல் நம்முடையஜாதியின் சீர்திருத்தத்தை அவசியம் செய்வமேயானல் நம்முடைய சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் அநேக சீர்திருத்த வாதிகளுடைய தீங்கான சட்டங்கள் பொடிப் பொடியாவது திண்ணமென்று அறியவும்.

ஜி. எ. விசுவநாத சாஸ்திரி, மதுரை.

பிராசீன கல்வியும் ஸநாதன தர்ம வித்யாலயமும்

(K. A. ராமசாமி கோவிலார்.)

ஆதிகாலத்தில் வாலிபர்கள் மத நெறிகளை கற்றும், மத சாஸ்திரங்களை படித்தும், தினந்தோறும் செய்யவேண்டிய கர்மானுஷ்டானங்களை பயின்றும் வந்தார்கள். இவ்விதமாக .... ராமச்சந்திரரும் வேத சாஸ்திரங்களை கற்றும், கர்மானுஷ்டானங்களை தவறாது செய்தும், ஞானம் உதயமாகுதற்குரிய சாஸ்திர படிப்பும், கர்மானுஷ்டானமும் செய்து வந்தார். அவர் குருவினிடத்தில் எவ்வாறு நடந்து வந்தாரென்பதும் நீங்களே அறிந்துகொள்ளலாம். இப்படி அவர் ஒழுக வேண்டியதில்லை. ஆயினும், வாலிபர்கள் அனுஷ்டானத்திற்கு தாம் திருஷ்டாந்தமாக இருக்கும்படி ஒழுகலாயினர் இது பிராசீன படிப்பில் முதன்மையாய் கவனிக்கவேண்டிய விஷயம்.

பிராசீன வாலிபர்கள் நீதி முறை கற்று அதன்படி நடந்தார்கள். வணக்கம், மரியாதை, சத்தியம், தைரியம், விநயம் முதலிய முறைகளையும் கற்று ஒழுகி வந்தார்கள். தன்னை போலது பரோபகார சித்தமுள்ளவர்களாவும் விளங்கினார்கள். "தன்னுயிர் ஓம்பான் பிற உயிர் ஓம்புவான்" என்பது வாலிபர்களுடைய நீதி அப்யாஸ முறை மகுடமாக பாவிக்கப்பட்டது.

தற்கால வாலிபர்களின் நிலைமையை பார்ப்போம். தத்வஞானம், நீதி முறை சரீர பயிற்சி, இவைகளை முற்றும் விட்டுவிட்டார்கள். தற்கால படிப்பினால் உலக காரியத்திற்கு தகுந்த மனிதன் எப்படி ஏற்படுவான்? ஒவ்வொரு மனிதனும் நாலில் மூன்றுபாகம் கல்வியினால் விருத்தியடைய பெறுகிறான். தற்காலம் நீதி முறையை அசட்டை பண்ணிவிட்டார்கள். தத்வஞானத்தை முற்றிலும் கைவிட்டார்கள். இம்மாதிரியான கல்வியின் பயன் என்னே!

ஹாரோ, இடன், ரக்பி; வின்செஸ்டர் முதலான இடங்களிலுள்ள பள்ளிக்கூடங்களை பார்ப்பீர்களேயானல் கிருஸ்த்துவ மார்க்க நெறியில் ஆதிமுறையின் உயர்வானபாவம் நிகழ்வதை காணலாம். அங்குள்ள வாலிபர்கள் வரவர தேசபிமானமும், மதாபிமானமும் உள்ளவர்களாக வருகிறார்கள்.

இம்முறையை இந்திய தேசத்திலும் நாட்டவேண்டும். இதை அநுஷ்டானத்துக்கு கொண்டுவருவது எப்படியென்றால் தற்காலம் நடக்கும் பள்ளிகூடங்களில் வாலிபர்களை படிக்கவைக்காமல்! மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் அறுபத்தினான்கு திருவிளையாடல் செய்த துவாதசாந்த மஹாக்ஷேத்திரமாகிய ஆலவாய் என்னும் மதுரைமாக்ஷேத்திரத்தில் ஏற்படுத்தியிருக்கும் சனாதனதர்ம வித்யாலயத்தை போல் ஒவ்வொரு டவுன்களிலும், கிராமங்களிலும், ஏற்படுத்தி அதன்வாயிலாக வாலிபர்களை கல்விகற்கும்படி செய்வித்து பிராசீனமத நெறிகளைபோதிக்க வேண்டும்.

அவ்வித்யாலயத்தில் தற்கால ரீதிப்படி சகலவிதமான, இங்கிலீஷ், தமிழ், பூகோளம், மதசம்பந்தமான கல்வி, சம்ஸ்கிருதம். வேதாத்தியயனம். முதலிய கல்விகள் வாலிபர்களுக்கு போதிக்கப்பட்டு வருகின்றன. "இளமையில் கற்றகல்வி சிலையெழுத்து" போல் விளங்கும் என்பதாக பெரியோர்கள் கூறி இருப்பது போல் இளமை பருவத்திலேயே தக்க மதக்கல்வியை போதித்தால் சிலையெழுத்து போல் பிரகாசமாக எக்காலத்திலும் விளங்கும்.

இனி இந்தியா பிரகிருத நிலைமையை அடையவேண்டுமானல் ஒவ்வொரு ஊரிலும் தாமதியாமல் உடனே சனாதனதர்ம வித்யாலத்தை நிறுவுங்கள்! வாலிபர்களை நல்வழி படுத்துங்கள்! இதுவே இந்தியாவின் விமோசனத்துக்கு தக்கவழி.

"ஞானம்வாழி நன்மைவாழி நாடு
ராசநீதி சீர்தானம்வாழி தருமம்வாழி
சகலவேதாகமங்களும்வாழி கல்வி
வாழி கற்றறிந்த கேள்வியன் பான
பேர்கள்வாழி யீசனடியார்வாழி
வாழியே"

மிகச்சிக்கனம் பூர்ணகுணம்

'ஆத்ரேய'

குடும்ப ஔஷதப் பெட்டி,

ஸாதாரணமாக ஏற்படும் எல்லா வியாதிகளுக்கும் ஒரு சிறந்த வைத்தியருடைய உதவியைச் செய்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், பிரயாணம் செய்வோருக்கும் அத்யாவசியமானது.

ஒரு பெட்டி விலை ரூ 5—0—0

'ஆத்ரேய'

ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சினப்பள்ளி

ஹிட்லர் வெற்றிபெற்றால் இந்தியாவின் கதி என்ன?

பண்டித நேரு கூறிய வார்த்தை

(டி. ஏ. ராமன்)

ஜெர்மனியர் பிரான்ஸைப் படையெடுத்தது முதல் உலக நிலைமை மாறிவிட்டது.

அதற்கு முன்பு நேசதேசத்தார் கடலிலும் பொருளாதாரத் துறையிலும் மட்டும் போர்நடத்திக்கொண்டிருந்தனர். பிரெஞ்சு யுத்த அறிக்கைகள் "பீரங்கிப் படை நடவடிக்கைகள் கொஞ்சம் இருந்தன" என்று மட்டும் கூறிக்கொண்டிருந்தன. ஆனால் சில நாட்களுக்கு முன் நாஸிகளின் பிசாசு படைகள் பிரான்ஸின் உடலையே கடித்துக் குதறி உதிரம் குடிக்க ஆரம்பித்து விட்டன

இதிலே எதிர்பாராததொன்றுமில்லைதான் அதை நாம் ஒப்புக்கொள்ளுவோம். இருந்தாலும் நாஸி அரக்கர்களின் வேகம் இவ்வளவு இருக்குமென்று பிரான்ஸ் எதிர்பார்க்கவில்லை. ஒரேயடியாய் ஒரு வல்லரசு தன் எல்லா சக்திகளையும் பிரயோகித்து தன்முழு பலத்தையும் பணயம் வைத்து உயிர் சேதத்துக்கு அஞ்சாமல் போராடியது எந்த யுத்தத்திலும் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை.

இது கடைசி முயற்சி தான். இதிலுள்ள உபாயமும் நாம் முன் பின் அறியாததே. ஆகையால் நாம் நம்முடைய பல மனோராஜ்யங்களை மறந்துவிட வேண்டும். கொள்கைகளையும் மாற்றிக்கொள்வது அவசியம். யுத்தத்தின் வேக நடையில் மகத்தான புரட்சி ஏற்பட்டிருக்கிறது.

நான் கண்ட பல காட்சிகள் என் நெஞ்சைக் கலக்கிவிட்டன. ஐம்பது வயதுக்கு மேற்பட்ட குடும்பஸ்தர்கள் போர் முனைக்குப்புறப்படுவதை நான் கண்டேன். குமரிகள் தம் காதலர்களை விடைகொடுத்தனுப்பும்போது பொங்கி யெழுந்த கண்ணீரை அடக்கிக்கொள்ளமுயலுவதைக்கண்டேன் அழகிய பாரிஸ் நகரின் பூக்குலுங்கும் மரங்கள் நடுவே பசியாலும் பயத்தாலும் அலங்கோலமான முகங்களுடன் திரள் திரளாய்த் தப்பியோடும் மக்களை நான் பார்த்தேன். திடுக்குற்று அமளிக்கும் பிரான்ஸின் உன்னதசித்திரம் என் மனத்தை விட்டு அகலாது.

பிரிட்டனின் கதியும் இந்தியாவின் கதியும் கடுமையான அபாயகரமானசோதனைக்குட்பட்டிருக்கின்றன என்பதைச்சென்ற நாலைந்து வாரங்களாக நாம் காண்கிறோம். இப்போது நாம் வீணாக்கும் ஒவ்வொரு நிமிஷமும் நம் அபாயத்தை அதிகமாக்குகிறது.

நான் ஒரு இந்தியன். இந்தியன் என்ற உணர்ச்சி தீவிரமாகக் கொண்டவன். நம்முடைய கஷ்டங்களையும் அதற்குவேண்டிய நிவாரணங்களையும்என்னால்மறக்கமுடியாது நமக்கு இழைத்த அநீதிகளையும் இழைக்கப்படும் அநீதிகளையும் நான்மறக்கவில்லை. கோபத்தனமாய், குருட்டுத்தனமாய், நம்முடைய உரிமைகளை மறுப்பதையோ அல்லது அரைகுறையாய்க் கண்யமற்று அளிப்பதையோ நான் மறந்துவிடவில்லை.

இருந்தபோதிலும் எனக்கு ஒன்று நிச்சயமாய்த் தெரிகிறது. நாஸி பயங்கரத்தை முன்னேற விடாமல் அணைபோட்டுத் தடைசெய்யாது போனால் வாழ்க்கையிலுள்ள சுதந்தரமும் வசீகரமும் போயே போய் விடும்.

மூன்று வருஷமாய் நான் ஐரோப்பிய அரசியலை உன்னிப்பாய்க் கவனித்து வந்திருக்கிறேன். என் பகற்கனவுகள் எல்லாம் பறந்துவிட்டன. இந்த யுத்தத்தில் வெற்றியடைய நாம் உதவி செய்தால் அதுவே நம்முடைய உரிமைப் போராட்டத்திற்கும் வெற்றியளிக்கும் என்று நான் சொல்லவில்லை. எனக்கு ஒன்று நிச்சயமாய்த் தெரிகிறது ஜெர்மனி வெற்றி பெற்றால் இந்தியாவிலோ வேறெங்கேயோ சுதந்தரம் கிடைக்குமென்ற நம்பிக்கையே ஆகாசம்வரை எகிறிப்போய்விடும் அந்த நாஸிடாங்கிகள் வெற்றி மாலையுடன் நுழைந்தனவோ, இந்தியாவின் சுதந்தர ஆசையெல்லாம் மண்ணாக வேண்டியதுதான்.

மனிதவர்க்கத்துக்கே நெருக்கடியான இந்த வேளையில் நாம் சரியான முறையைக் கடைப்பிடிப்போம். கண்யமாய் அளிக்கவும், நல்லகாரணத்துக்காகத் தியாகம் செய்யவும் இந்தியாவுக்கு யாரும் போதிக்கவேண்டியதில்லை.

இந்த நாட்களிலெல்லாம் அடிக்கடி என் மனதில் ஒரு ஞாபகம் தோன்றிக்கொண்டேயிருக்கிறது. லண்டன் ஸெணைட்ஜேம்ஸ் தெரு வீட்டில் பண்டிதநேரு இருந்தார். அப்போது மூனிச் உடன்படிக்கைக்கு முதல் நாள். யுத்தம் வந்தே தீரும்போலிருந்தது. நேரு தன் அறையில் அங்குமிங்கும் உலாவிக்கொண்டே சொல்லுகிறார். "நாஸிகள் ஜெயிக்கும்படி நாம் விடவே கூடாது" என்று.

இதுவே உண்மை. நாம் யாருடைய அழைப்புக்கும் காத்திராமல் நாமாகவே நம் உதவியையெல்லாம் இப்போரில் அளிக்க உறுதி செய்வோம். நாஸிகள் ஜெயிக்க விடப்போவதில்லை என்று உலகெல்லாம் ஒலிக்கும்படி பறைசாற்றுவோம்.

"தார்மிக ஆதரவு இந்தியாவின் விசேஷக் கொடை" என்றார் மகாத்மா காந்தி. இந்தியா அதை அளிப்பதோடு, 40 கோடி இந்தியரின் மன உறுதிக்கு எவ்வளவு பலம் இருக்கிறதென்றும் நாம் காட்டுவோம்.

(இந்தியா கவர்ன்மெண்ட் விளம்பர இலாகா பிரசுரம்)

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலய கீதா பாஷ்ய ப்ரவசன பூர்த்தி வைபவம்

குடந்தை

இந்த கீதா பாஷ்ய ப்ரவனமானது பிரமாதி ௵ கார்த்திகை மீ 26உ முதல் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசார்யாளின் ஆக்ஞா பிரகாரம் அவர்களின் ஸ்ரீமுகத்தை முன்னிட்டு சோலையப்ப முதலியார் அக்கிரஹாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயத்தில் வேத சிரோமணி பிர்ம்மஸ்ரீ எஸ். வி சுப்பிரமணிய சாஸ்திரிகள் சிஷ்யாளான மிலட்டூர் பிர்ம்மஸ்ரீ வேதாந்த சிரோமணி கே. ரெகுநாத சாஸ்திரிகள் அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

மத்தியில் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யாள் நேரில் விஜயம் செய்து அனுக்ரகித்தார். ஷை கீதா பாஷ்ய ப்ரவசனமானது விக்ரம ௵ ஆனி-மீ 11உ திங்கட்கிழமை பூர்த்தியடைந்தது. அன்று தினம் காலையில் வித்யாலயத்தை சேர்ந்தவர்களாலும் பாஷ்யம் வாசித்து வந்தவர்களாலும் அக்கிரஹார வாசிகளாலும் வெகுவிமரிசையாக ஆசார்ய படத்திற்கு பூஜை, பாஷ்ய பூர்த்தி உபநிஷத் பாஷ்ய ஆரம்பம் முதலியவை வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. மாலை 3 மணிக்கு இந்நகர் முனிசிபல் சபை சேர்மன் ஸ்ரீமான் டாக்டர் எம். வி. தியாகராஜய்யர் அவர்கள் அக்ராஸனம் வஹித்தார்கள். அது சமயம் ஜகத்குரு ஆசார்யாள் சால்வை விபூதி பிரஸாதம் அனுப்பித்து அனுக்ரஹித்தார்கள். கூட்டத்திற்கு மகா-ள-ள-ஸ்ரீ கே. ஆர். ரெகுநாதராவ் அவர்கள் ஆங்கரை ரெங்கசாமி சாஸ்திரிகள் ஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் காலேஜ் லெக்சரர் வித்யாசாகர வியாஸராயர் சாஸ்திரிகள் டவுன்ஹைஸ்கூல் பண்டிட் எம். ராமராவ் அவர்களும் ஹரிராவ் முதலிய மற்றும் பல பிரபுக்களும் வித்வான்களும் விஜயம் செய்தார்கள் முதலில் கடவுள் வணக்கம். பிறகு அக்ராஸனருக்கு வித்யாலய காரியதரிசியால் உபசாரபத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

அக்ராஸனர் முகவுரையில் இது மாதிரி சத்காரியங்களுக்கு தலைமை வஹிப்பதில் மிகவும் சந்தோஷமடைவதாகவும் இதுமாதிரி சத்காரியத்தை நிர்வாகம் செய்கிறவர்களை தான் பாராட்டுவதாகவும். ஆசார்யாளின் அநுக்ரஹத்தாலும் சிஷ்யர்களின் சிரத்தாபக்தியான உறுதியாலும் பிர்மஸ்ரீ சாஸ்திரிகளுடைய உயர்ந்த ப்ரவசனத்தாலும் இந்த பாஷ்யமானது நிர்விக்னமாக பூர்த்தியடைந்தது என்றும் இதே மாதிரி உபநிஷத் பாஷ்யமும் ஸூத்ர பாஷ்யமும் ஆசார்யாளின் அனுக்ரஹத்தால் பூர்த்தியடையுமென்று நம்புவதாக தெரிவித்தார். பிறகு தலைவர் சாஸ்திரிகளுக்கு தங்கமடல் கோத்த மாலையை அளித்தார் பிறகு சங்கத்தின் காரியதரிசி டி. வி. நாகராஜ சாஸ்திரிகள் சங்கம் ஆரம்பித்த வரலாற்றையும் சங்கத்தாரால் நடத்தப்பட்டுவரும் சங்கீத பாடசாலை ஹிந்து பாடசாலை பாஷ்யபாடசாலைகளைபற்றியும் விஸ்தாரமாக எடுத்துரைத்தார். பிறகு ஆங்கரை ரெங்கசாமி சாஸ்திரிகள் மன்னார்குடி வேம்பு சாஸ்திரிகள் காலேஜ் பண்டிதர் கே. எல். வியாசராய சாஸ்திரிகள் முதலியவர்கள் கீதையின் மகத்வத்தைப்பற்றியும் பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகளின் குணாதிசயங்களைப்பற்றியும் எடுத்துரைத்தார்கள். பிறகு ஆசார்யாள் படத்திற்கு பூஜை செய்யப்பட்டது. அங்கு கூடியிருந்தவர்கள் எல்லோருக்கும் ஆசார்யாளின் பிரசாதம் வழங்கப்பட்டது. சிஷ்யர்களாலும் பிரமுகர்களாலும் சாஸ்திரிகளுக்கு சன்மானம் வழங்கப்பட்டது. பிறகு சாஸ்திரிகள் ஆசார்யாளின் மகத்வத்தைப்பற்றி அரிய உபன்யாசம் செய்து ஆசார்யாளுக்கு வந்தனத்தை தெரிவித்தார். அக்ராசனர் முடிவுரைக்கு பிறகு காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு வைபவம் இனிது முடிவுற்றது.

டி. வி. நாகராஜ சாஸ்திரிகள். காரியதரிசி.

ஆலயப் பிரவேசம்.

காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாலும் மதிப்பிற்குரிய அறிஞர் பலராலும் புகழ்ப்பெற்ற ஓர் சம்பாஷணை புஸ்தகம். சீர்திருத்தகாரர்களால் ஹரிஜன ஆலயப் பிரவேசத்திற்கு அனுகூலமாகக் கூறப்படும் யுக்திகளை தகர்த்தெறியக்கூடிய பிரமாண பிரதியுக்தி வாதங்களுடன் கூடியதுடன் ஸனாதன ஹிந்து மதத்தின் பெருமையை எளிய தமிழ் நடையில் விளக்கும் புத்தகம் இது ஒன்றே. ஒவ்வொரு ஹிந்துவும் கட்டாயம் படிக்கவேண்டிய நூல். அணா 6. தபால் ஸ்டாம்புகள் அனுப்பி கீழ்க்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

கண்டமங்கலம்
பாலசுப்பிரமணிய அய்யர்,
10, பிலாத்தோப்பு, மயிலாப்பூர், மதராஸ்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-௵ ஆனி-௴ 21௳

காந்திஜியின் அஹிம்ஸை.

ஹிம்ஸையையே பிரதான ஸாதனமாகக் கொண்ட மேற்றிசை முறைகளும், அஹிம்ஸையை முக்யமாகக்கொண்ட காந்தீயமும் உலக வாழ்க்கைக்கு பொருத்தமற்றவையென்றும், பலனன்றி வீழ்ச்சியடையக் கூடியவையென்றும், ஹிம்ஸை, அஹிம்ஸை இரண்டிற்கும் சாஸ்திரீயமான ஒரு வறையறையுடன் கூடிய விவஸ்தையே அநுபவத்தில் பலனளிக்க முடியுமென்றும் சென்ற வாரம் குறிப்பிட்டோம்.

கோரமான யுத்தத்தில் சிக்கியுள்ள பிரிட்டனுக்கு ஸ்ரீமான் காந்தி தமது அஹிம்ஸை மதத்தை உபதேசித்து ஓர் வேண்டுகோளை விடுத்துள்ளார். தமது அஹிம்ஸையைப்பின் பற்றினால் உலகம் யுத்தம் போன்ற ஆபத்திலிருந்து தப்பிவிட முடியுமென்று காந்தி பலமாக நம்புகிறார். இவ்விஷயமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையையும், ஏற்கனவே பலதடவை அவர் சொல்லியுள்ளவைகளையும் ஆராய்ந்து பார்த்தால் அவருடைய அபிப்ராயமானது குழப்பமுண்டுபண்ணுவதாயும், பிடிபடக்கூடாததுமாகவே இருப்பதைப் பலர் உணரக்கூடும். காந்திஜி பெரியவர் என்ற ஒரு பஹுமானமான புத்தியினால் மட்டும் யாவரும் அவரது கொள்கைக்குத் தலையாட்டுகிறார்களே யல்லது, உண்மையில் விஷய விவேசனம் செய்து குணாகுணங்களை யறிந்து அவரை ஆதரிப்பவர் மிகமிகச் சிலரே இருக்கக் கூடும். அவர் போதிக்கும் அஹிம்ஸையானது உலக அநுபவத்திற்கு சிறிதும் ஏற்கக்கூடியதாயில்லை என்பதை எவரும் வெகு எளிதாகவே அறியக்கூடியதாயிருக்கிறது. ஸத்யம், அஹிம்ஸை இரண்டும் மிகஉயர்ந்த தர்மங்களே. ஆனால் அவைகளை பிரயோகிக்கவேண்டிய கால தேசாதிகாரிகளும், அவைகளால் விளையக்கூடிய பலனும்ளத்தகையதென்பதை காந்திஜி அறியவில்லை. உலகவாழ்க்கையை வெறுத்து நிவர்த்தி மார்க்கத்தில் சிறக்கப் பிரியப்படுவோருக்கே அஹிம்ஸையானது ஒரு இன்றியமையாத துணையாயிருக்குமென்பதே உண்மை.

அஹிம்ஸையின் முக்ய பலன், மனஸ் சாந்தியும் வைராக்கியமுமேயாகும். இவ்விரண்டு ஸௌகர்யத்தையும் அடைந்து நிம்மதியாக வாழ விரும்புவோருக்கு அஹிம்ஸை ஸாத்யமானது தான். ஆனால் உலகம் பூராவும் இன்று நிவர்த்தி மார்க்கத்தில் நின்று வைராக்யத்தையே வேண்டுகிறதா? இல்லையே! மனித ஆசையின் ஸ்வரூபமாக விளங்கும் இவ்வுலகவாழ்க்கையில் அஹிம்ஸையை அநுபவத்தில் பலனுற அனுஷ்டிப்பது எப்படி ஸாத்யமோ? வரையறையற்ற அஹிம்ஸையைக் கைகொண்டால் உலக வாழ்வு நடைபெறுமா? மனது, வாக்கு, சரீரம் ஆகிய திரிகரணங்களாலும் ஏற்படக்கூடிய ஹிம்ஸைகளை உலக வாழ்வில் தவிர்க்க முடியுமென்று எவரும் சொல்ல முடியாது. அப்படியானால் எல்லாம் ஸ்தம்பித்து விடும். கிருஷியில் ஹிம்ஸை இருக்கிறது. மாடுகறப்பது ஹிம்ஸையல்லவா? வியாபாரம் செய்வது எதில் சேர்ந்தது? ஒவ்வொன்றையும் கவனித்தால் எதிலும் ஹிம்ஸை இருப்பது தெளிவு. இவ்வளவையும் அஹிம்ஸைக் காரர்கள் விட்டுவிட முடியுமா?

பிறர் மனம் நோகும்படியான நூற்றுக் கணக்கான வார்த்தைகளையும், வியாஸங்களையும் காந்தியே உலக வாழ்க்கையில் தவிர்க்க முடிந்ததா? இது ஹிம்ஸையல்லவா? ஆகையால் ஆசை உலகில் வாழும் பிரஜைகளுக்கு அஹிம்ஸையை அவர் போதிப்பது தம் விஷயத்தில் கூட அநுபவ ஸாத்யமற்றதென்பதை காந்திஜீ அறியவில்லையே!

காந்தி போதிக்கும் அஹிம்ஸையில் கூட ஹிம்ஸையே நிறைந்திருப்பதை அவர் உணர்ந்தாரா? அஹிம்ஸை மூலம் காந்தி சாதிக்க விரும்பும் கார்ய மென்ன? பிறரைப் பணியவைத்து தமது வசமாக்கிக் கொள்வதல்லவோ காந்திஜியின் நோக்கம். தமது மனஸ்ஸாக்ஷிப்படி நடக்க விரும்பும் ஒருவன் அல்லது ஒரு ஸ்தாபனத்தை காந்திஜி தமது எண்ணப்படி நடக்கும்படி வற்புறுத்தி நிர்பந்திக்க வல்லவோ அஹிம்ஸையையும், ஸத்யாக்ரஹத்தையும் கையாளுகிறார்? இதில் பலாத்காரமும், ஹிம்ஸையும் நிறைந்திருக்க வில்லையா? ஆயுதபலத்தைக் கொண்ட ஹிம்ஸை முறையால் பிறர் மனதை பலாத்காரமாக மாற்றுவதற்கும், காந்திஜியின் சண்டித்தன அஹிம்ஸை உபாயத்தால் மாற்றுவதற்கும் தாரதம்ய மென்ன? எதிரியைபலாத்கார முறையால் பணியவைக்கும் அம்சமானது இரண்டிலும் ஸமமாகவே இருக்க வில்லையா? இது ஹிம்ஸையில்லையா? "ஸத்யாக்ரஹம்" என்ற பதத்தொடர்ச்சியிலேயே ஹிம்ஸை பிரதி பலிக்கிறதே? ஆக்ரஹம் என்பது அஹிம்ஸைக்கு மாறான குணமல்லவா? இவ்வாறு முன்பின் விரோதங்களையும், உலகாநுபவ விரோதங்களையும் கவனியாமல் கண்மூடித்தனமாக அஹிம்ஸையைப் பற்றிப் பேசுவது நகைப்பிற்கிடமானதாகவே இருக்கிறது.

ஸி. ஆர். கோபம்.

அவஸரச்சட்ட மாஜிமந்திரி நமது ஸி. ஆர் மிகுந்த கோபமடைந்து விட்டார். பிரிட்டனையும் வைஸ்ராயையும் கண்டிக்கிறார். காங்கிரஸ் மாளிகைக்கூட்டத்தில் இவர் கோபமாகப்பேசினார். காந்தியையும் தாக்கிவிட்டார். வைஸ்ராயை பேட்டி காணுவதற்கு காந்திஜி போனது மிகவும் அநுசிதமென்கிறார். கார்யக்கமிட்டி கூட்டத்திற்கு தாம் போக பிடிக்க வில்லையென்றும், பிரிட்டனுடையவும், வைஸ்ராயினுடையவும் வீண்வார்த்தைகளை காங்கிரஸ்தலைவர்கள் வீணாகஎமாந்து பரிசீலனை பண்ணிக் கொண்டிருப்பது தமக்கு பிடிக்கவில்லை யென்றும் வெறுப்புடன் பேசினார்.

மறுபடி பதவியேற்புக்காகத் திரைமறைவில் செய்த வேலைகள் வீணாகி விட்டன. தேசீயகவர்ன்மெண்ட் அமைப்பும் கனவாகி விட்டது. அரசியல் நிர்ணய சபை பேச்சு புகைந்து விட்டது. பிரிட்டன் காங்கிரஸை பொருள்படுத்த வில்லை. வைஸ்ராய்க்கு பற்பல விசேஷ அதிகாரங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த நிலைமையில் இனி மந்திரி பதவிக்கு அவகாசமேது? ஸ்வப்னத்திலுமில்லை. அவ்வளவு தான். ஸி. ஆர். கோபமடைந்து விட்டார். (உண்மை வாதி.)

ஸ்ரீ-ல-ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகளின்
சிக்கத்தம்பூர் சமாதி ஆலய

மஹா கும்பாபிஷேகம்

ஷை சுவாமிகளது மடாலயம் பல அன்பர்கள் பொருளுதவியைக்கொண்டு கட்டப்பட்டு இனிது நிறைவேறப்பட்டிருக்கிறது. இவ்வாலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விக்ரம-௵ ஆனி-௴ 24.... (7—7—40) ஞாயிற்றுக்கிழமை துவிதியை பூச நட்சத்திரம் கூடியநன்னாளில் உதயாதி 7 நாழிகைக்கு மேல் 12¼ நாழிகைக்குள் சிம்ம லக்னத்தில் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்றுள்ளபடியால் அன்பர்களனைவரும் தங்களாலியன்ற பொருளுதவி புரிந்து தாங்களும் வந்து தரிசித்து இருமைப்பேறும் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றனம்.

டிரஸ்டிகள்.

மஹா ஸோமயாகம்

சிவகாளீபுரமென்கிற சேங்காலிபுரம் கிராமத்தில் வஸிக்கும் பிரும்மஸ்ரீ அக்னிசித் நாராயண வாஜபேயீ, ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுடைய அனுக்கிரஹத்தையும் பிரபுக்களுடைய உதவியையும் அவலம்பித்து தஞ்சாவூர் சகாநாயக்கன் தெரு, இந்துருபட் என்கிற பவானி சங்கர்பட்டு தட்டிமாலில் விக்ரம-௵ ஆனி-௴ 27-௳ (10—7—40) புதன்கிழமை முதல் ஆரம்பித்து 38-வது ஸம்ஸ்காரமாகிய அத்யக்னிஷ்டோமம் என்கிற மஹா ஸோமயாகத்தை நடத்தி ஆனி-௴ 31௳க்கு (14—7—40) ஞாயிற்றுக்கிழமையில் பூர்த்தி செய்வதாய் ஏற்பாடுசெய்து இருப்பதால் ஆஸ்திக மஹாஜனங்கள் வந்து தரிசித்து யக்ஞேச்வர ப்ரஸாதத்தை அடையவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். தினந்தோறும் யக்ஞசாலையில் அனேக வித்வான்களுடைய உபன்யாஸம் நடைபெறும்.

(ஓ-நி)

தக்ஷிணாயந பிரதம விவாஹம்

மத்யஸ்தர்களின் நிர்ணயம்

(ஜூன்-மீ 20-உ தொடர்ச்சி)

இந்த வ்யவஸ்தையானது பிரதம, த்விதீய விவாஹ ஸாதாரணமானதே. விவாஹகால விதிகளில், பிரதம விவாஹம், த்விதீயாதி விவாஹமென்கிற விசேஷவிதியொன்றும் காணப்படவில்லையன்றோ ?

ஸமாவர்த்தனமோ வென்றால் எல்லா க்ருஹ்யங்களாலும், உத்தராயணத்திலேயே விதிக்கப்பட்டிருப்பதால், விவாஹத்தைவிட அது வேறுகர்மாவாக இருப்பதால் ஸ்வகாலத்திலேயே அது அநுஷ்டிக்கப்பட வேண்டும்.

अनाश्रमी न तिष्ठेत क्षणमेकमपि द्विजः ।

என்ற வசனமும் "விவாஹம் நேர்ந்த ஸமயத்தில்கூட அதைச்செய்து கொள்ளாமல் ஸ்வச்சந்தமாக நிராகரித்து நிராச்ரமியாக காலத்தை வீணாக்கக்கூடாது,, என்ற தாத்பர்யத்தில் யோஜனை செய்யக்கூடியதாக ஸ்வரஸமாகத் தோன்றியபோதிலும்

"मार्गशीर्षे विवाह प्रसक्तौ दक्षिणायनेऽपि समावर्तनं भवति । अन्यथा "अनाश्रमी- " इति निषेधातिक्रमापत्तेः ।"

(தர்மஸிந்து பக்கம் 166)

"स्नानादिषु चौलवत् कालः । तथापि आसन्न विवाहस्य दक्षिणायनेपि तानि कार्याणि ।

"दक्षिणायनमासेपिकृष्णपक्षेऽपि वा भवेत् ।
आसन्नेतु विवहेऽथ स्नान कर्मसमारभेत् ॥"
इति वचनात् " (வித்யாமாதவீயம் 116 பக்.)

"सर्वर्तवो विवाहस्य, इति वचनात् यदा दक्षिणायनेऽपि विवाहः, तदासमावर्तनं तत्समीपकालएव …………उदगयन नियमार्थ इति गम्यते ।"

(ஆப-க்ரு- தாத்பர்ய 6-பக்கம்.)

என்று அநேக நிபந்தனங்களில் காணப்படும் வாக்யங்களைக் கொண்டு ஸமாவர்த்தனமானது விவாஹகாலத்தைச் சேர்ந்தாப் போல் அநுஷ்டிக்க வேண்டியிருப்பதால், அது தக்ஷிணாயநத்திலும் அநுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்தந்த நிபந்தனக்ரந்தங்களை பிரதானமாக அநுஸரிப்பவர்களுக்கு தக்ஷிணாயநத்திலும் ஸமாவர்த்தனம் செய்வது தோஷமுள்ளதாகாது.

இங்கு கீழ்க்கண்ட சங்கைதோன்றக் கூடும். அதாவது:—

அந்தந்த நிபந்தனங்களில் காட்டியுள்ள வியவஸ்தையை அவரவர் அநுஸரிப்பதானால், ஸ்மிருதி முக்தாபல நிபந்தனக்கிரந்தத்தை அநுஸரிப்பவர்களுக்கு தக்ஷிணாயநத்தில் விவாஹமே ஸித்திக்காமல் போய் விடும்.

எப்படி யென்றால், ஸ்மிருதி முக்தா பலத்தில், விவாஹவிதி விஷயமாக பரஸ்பரம் விருத்தங்கள் போல் தோன்றும் ஸ்மிருதி வசனங்களை உதாஹரித்து, ஸ்மிருதி வசனத்தை கொண்டே கீழ்காணும் வியவஸ்தை அங்கு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது:—

"अत्र व्यवस्थामाह व्यासः, अधर्म्यायेविवाहास्ते समस्ताः सार्वकालिकाः। निषिद्धतिथि मासेऽपिकर्तव्या इति निश्चयः (வைத்ய-261-பக்கம்.)

மேற்கண்ட சங்கைக்குப் பரிஹாரமாவது:— ஆஸுராதி விவாஹங்கள் காலத்தைப் பிரதீக்ஷிக்காமலும், விதி நிஷேதங்களை அபேக்ஷியாமலும், ஸர்வகாலத்திலும் செய்யலாமென்றிவ்வளவு மட்டுமே இங்கு வியவஸ்தைகிடைக்கிறது. தர்ம்யமான விவாஹங்களில் எவ்வித வியவஸ்தையும் இங்கு காட்டப்படவில்லை. निषिद्धतिथिमासेषु என்பதால் சொல்லப்பட்ட நிஷேதங்கள் தர்ம்ய விவாஹ விஷயங்களென்றும், நிஷித்தமாஸங்களில் விவாஹவிதிகள் அதர்ம்ய விவாஹ விஷய மென்றும் ஒருவியவஸ்தை இங்கு வெளிப்படுவதாகச் சொல்வதும் யுக்தமல்ல. அப்படியானால் அநேகமாக எல்லா மாஸங்களுக்கும் நிஷேதமிருப்பதால் அந்த விதிகள் அதர்ம்ய விவாஹ விஷயமாகி, தர்ம்ய விவாஹத்திற்கு கால விதியே இல்லாமல் போகத் தெரியும். ஆகையால்தான் மற்ற நிபந்தனகாரர்கள் விவாஹ கால விதி நிஷேதங்களையெல்லாம் தர்ம்ய விவாஹ விஷயத்திலேயே வ்யவஸ்தை செய்தார்கள்.

நிர்ணய ஸிந்துவில்:—

"अत्र माघफाल्गुनाषाढवर्जं नवमासाः, मुख्यः कालः । ………… निशिचेत् द्वादशस्वपिमासेषु उद्वहेदितिकालादर्शः ॥" (1078-பக்கம்)

यत्तु सार्वकालिकमेकेविवाहमिति, तत् आसुरादिविषयं ॥ (1074-பக்கம்)

புருஷார்த்த சிந்தாமணியில்:—

अत्र विवाहानिषिद्धाषाढादि मासानां देश भेदेन व्यवस्थेति केचित् ।

यत्तु, सार्वकालिकमिच्छन्ति विवाहं गौतमादय इति, तत् अधर्म्य विवाहविषयं । अत्यासन्नर्तु कालकन्याविवाह विषयं वा इति केचित् ॥

शुक्लपक्षंप्रशंसन्ति विशेषेणोत्तरायणं ॥

(446-பக்கம்.)

आश्वलायनगृह्यनारायणीये:—

"नोदगयनादिनियमः, कोऽभिप्रायः दोषश्रवणात् "ऋतुमत्यांहि तिष्ठंत्यांदोषः पितरमृच्छति" अन्येच-लौकिकाः दोषाः समुच्चंते பக்கம் 16.

दोषश्रवणत् என்பதால் சொல்லப்பட்ட வ்யவஸ்தையானது மூலபிரமாண மெடுக்காததால், தானாக ஊஹிக்கப்பட்டதென்று சங்கிக்கக்கூடாது. ஏனெனில்

மூலவசனமானது காலமாதவத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது.

இதுபோல், முன்காட்டிய தாத்பர்யதர்சன வாக்யமும் பிராமாணிகமானதேயாகும்.

ஒரு ஆக்ஷேபம். அதாவது :—"ஸர்வர்த்தவோ" என்ற ஸூத்ரவசனமே இங்கு பிரமாணமாகக் காட்டப்பட்டது. 'ஸர்வ" பதத்துடன் கூடிய அந்த ஸூத்ரமானது ஸ்மிருதி முக்தாபலக்ரந்தத்தில் ஆஸுராதி விவாஹ விஷயமாக யோஜனை செய்யப்பட்டிருக்கிறபடியால், அது போல் தக்ஷிணாயநத்தில் ஸமாவர்த்தனத்தை ஆகர்ஷிக்கலாமென்று தாத்பர்யதர்சனத்தில் சொல்லப்பட்டதும் ஆஸுராதி விவாஹ விஷயமாகவே பர்யவஸிக்கும் என்று. இந்த ஆக்ஷேபம் ஸரியன்று. सर्वर्तवः என்று ஏக வாக்யமாயுள்ள இந்த ஸூத்ரமானது शैशिरौ என்ற அம்சத்தினால் தர்ம்ய விவாஹ விஷயத்திலேயே அந்த காலத்தை தடுக்கிறது. அதுவே सर्वर्तव என்ற அம்சத்தால் ஆஸுராதி விவாஹ விஷயத்தில் எல்லாமாஸங்களையும் அநுமதிக்கிறதென்று சொல்லமுடியாது.

ஏனெனில் வாக்யபேததோஷம் பிரஸங்கிக்கும். சைசிராதிகளைத்தவிர்த்து மற்ற எல்லாமாஸங்களும் விவாஹத்திற்கு ஏற்றவையென்று ஒரே அர்த்தமுள்ள இந்தஸூத்ரமானது தர்ம்ய விவாஹ விஷயமாகவே பொருந்தக்கூடியது.

ஆனால் ஆச்வலாயனக்ருஹ்யத்தில், சுபகர்மங்கள் யாவற்றுக்கும் பொதுவாக உள்ள உத்தராயண காலத்திற்கு புனர்விதி இருப்பதைக்கொண்டு, விவாஹவிஷயத்தில் கௌணகாலமாகக்கூட தக்ஷிணாயநம் கூடாதென்று அதற்கு தாத்பர்யகல்பனம் செய்வதற்கும் ஆதாரமில்லை. ஏனெனில் இந்த ஸூத்ரத்தில் உத்தராயண ஸாமாந்ய விதியானது காணப்படவில்லை. மேலும் இது இதரக்ரந்தங்களை அபேக்ஷிக்கக்கூடியதாயுமில்லை. உண்மையில் ஆபஸ்தம்பாதிகளில் உத்தராயண காலத்தை ஸாமாந்யமாக விதித்துவிட்டு, விவாஹவிஷயத்தில் குறிப்பாக காலவிசேஷங்களைச் சொல்லுவதால் இது அதற்கு அபவாதமாக ஏற்படுகிறதென்றே நிச்சயமாகிறது. ஆனால் இங்கு எல்லா சுபகர்மங்களுக்கும். பொதுவாக உத்தராயணகாலத்தை நியமித்த, ஸ்மிருதி ஸூத்ராதி க்ரந்தங்கள் எப்படி அகாரணமாக விவாஹவிஷயத்தில் மாத்திரம் தக்ஷிணாயநத்தை அநுமதிக்கக்கூடுமென்று எவராவது சங்கித்தால் அவருக்கு கீழ்க்கண்ட பரிஹாரம் உள்ளது. அதாவது:— மற்ற சுபகர்மங்கள் பகலில் விதிக்கப்பட்டுள்ளன. ராத்திரியில் செய்யக்கூடாது விவாஹமோவென்றால் ராத்திரியில் கூட செய்யும்படி அநுமதிக்கப்படுகிறதென்கிற விசேஷம் இருக்கிறதல்லவா ? உத்தராயணமானது தேவர்களுக்கு பகலாகும். தக்ஷிணாயநமோ ராத்திரியாகும்.

ஆதலால், பகலில் அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்களுக்கு உத்தராயண நியமம் அவச்யமாயிருந்த போதிலும், பகலிலும், ராத்திரியிலும் அநுஷ்டிக்கக் கூடியதாயுள்ள விவாஹத்திற்கு தக்ஷிணாயநாநுஷ்டான அநுமதியும் ஸ்மிருதிகளில் இருக்கக்கூடியதுதான் இது நிபந்தனங்களில் பிரதிபாதிக்கப்பட்டுமிருக்கிறது.

முடிவுரை

ஆகையால் இந்த விசாரத்தினால் உண்டான நிர்ணயம் பின்வருமாறு:—

க்ருஹ்ய கர்மங்கள் விஷயத்தில் க்ருஹ்ய ஸூத்ரத்திற்கே பிராபல்யமாகையால் அந்தந்த ஸூத்ராநுஸாரிகளுக்கு தம்தம் ஸூத்ரோக்த விவாஹ காலமே முக்யமானது.

அது இல்லையானால், ஸ்மிருதி முதலியவைகளில் எல்லாமாஸங்களுக்கும், விதியும் நிஷேதமும் காணப்படுவதால் மற்ற மாஸங்கள் விவாஹத்திற்கு கௌண காலமாகும். அதிலும், விதி நிஷேதங்களுக்கு உள்ள மெஜாரிடியை அநுஸரித்து தாரதம்யம் வியஸ்தை செய்யப்படவேண்டும்.

கந்யைக்கு ருதுதோஷம் ஏற்படுமென்ற பயம் ஏற்பட்டால் எந்த மாஸத்தை வேண்டுமானாலும் விவாஹத்திற்கு எடுத்துக்கொள்ளுவது தோஷமாகாது.

ஸமாவர்த்தனத்திற்கு உத்தராயண கால நியமம் இருந்த போதிலும், தக்ஷிணாயந விவாஹ விதியை தவிர்க்கமுடியாத காரணத்தால், தக்ஷிணாயநத்திலும் ஸமாவர்த்தனமானது வரக்கூடியது. ஸமாவர்த்தனத்திற்கும் விவாஹத்திற்கும் வ்யவதானமிருக்கக்கூடாதென்ற நியமமானது பல நிபந்தனங்களில் காணப்படுவதாலும், ஸமாவர்த்தன பூர்வகமான விவாஹமும், ஏற்கனவே காட்டியுள்ள வ்யவஸ்தையை அநுஸரித்து தக்ஷிணாயநத்தில்கூட ஸ்மிருதி நிபந்தனக்ரந்தங்களில் அநுமதிக்கப் பட்டிருக்கிறது.

தி. வே. ராமசந்திர தீக்ஷிதர்.
(மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸ்பால்)
கே. பாலஸுப்ரமண்ய அய்யர்.
போலகம் ஸு. ஸ்ரீராமசாஸ்திரி.
(ஜம்புகேச்வரம், ஜகத்குரு வித்யாஸ்தான உபாத்யாயர்)

சாரதா சட்டமும் ஆலயப்பிரவேச சட்டமும்

இவ்விரண்டு அனர்த்தங்களில் சாரதா சட்டமே ஸனாதனதர்மத்திற்கு அதிபாதகரம். அவர்ணப்பிரவேசமான கோவில்கள் சிலவைகளே. சாரதாசட்டத்தாலோ விருஷலாபதிகளாகிய பூஜகர்களால் அசுத்தியடைந்த கோவில்கள் இப்போதே அனேகம் இருந்தும் சாரதாசட்டம் சீக்கிரம் ரத்து செய்யப்படாவிடால் பாக்கியுள்ள தேவாலயங்களும் அக்கதியையே அடையும். தவிர சாரதா சட்டத்தால் ஸனாதனிகள் அவரவர் வீடுகளில் கூட வர்ணாச்ரம தர்மங்களை ஆசாரத்துடன் நடத்த முடியாத அனர்த்தம் ஏற்பட்டு, அது விஷம்போல் க்ஷணேக்ஷணே விர்த்தியாகி வருகிறது. ப்ரௌடா விவாஹத்தை எப்போதுமே நடத்தி வந்த ஜாதிகளில் கல்யாணத்திற்கு முன்ருதுவாகும் பெண்கள் எப்போதும்போல் கலந்துவருவதால் வீடுகளிலேயே வர்ணாச்ரம தர்மங்களுக்குஹானி ஏற்பட்டும் அதிகரித்துவருகிறது. இவ்விஷயங்களுக்கு கொஞ்சம் ஸாவகாசமேற்படுத்திக்கொண்டு நன்றாய் யோசித்தால் சாரதா சட்டத்தால் ஏற்பட்டும் ஏற்படபோவதுமாகிய மஹா அனர்த்தங்கள் எந்த ஸனாதனிக்கும் பூர்த்தியாகத்தெரியாமல் போகாதாகையால் அவைகளை விஸ்தரிக்க அவசியமோ விஸ்தரிப்பதால் மாத்திரம் பிரயோஜனமோ இல்லை. பரிஹார சிந்தனையோ அவசியமாகிறது. நம் பெரியோர்களால் எத்தனையோ இடையூறுகளின் மத்தியில் அனாதிகாலமாக வெகுஆஸ்திக்ய புத்தியுடன் காப்பாற்றி நம் கையில் ஒப்பிவிக்கப்பட்ட ஸனாதன தர்மத்திற்கு ஏற்பட்ட இந்தகோடாலியை பனிரெண்டு வருஷமாகியும் நிவர்த்திக்காமலிருக்கிறோமே, இப்படியே யிருந்தால் வர்ணாச்ரம தர்ம கதி என்னவாகும். அதற்கு நாமல்லவா ஜவாதாரி? என்றது முதலியதுகளை ஒவ்வொரு ஸனாதனியும் நன்றாய் உணர்ந்து பௌருஷத்துடன் எல்லா ஸனாதனிகளும் ஐக்ய மத்யத்துடன் இனியாவது தாமதமன்னியில் தீவிரமாக, வேண்டியதைச் செய்யவேணும். சில ஸனாதன மஹானுபாவர்கள் சரீரத்தையும் திரவியத்தையும் பொருட்படுத்தாது இப்பனிரெண்டு வருஷ காலமும் உழைத்து வருகிறார்களென்பது பிரத்யக்ஷமே. ஆகிலும் அவர்களின் சிரமங்கள் பலன் கொடுக்காததற்குக் காரணம் அவ்வெகு சிலர்களின் பேரிலேயே சிலவும் சிரமமும், பாரங்களும் ஏற்படுவதால் தான்' ஆகையால் என் சிற்றறிவிற்குப்பட்டபடி சுருக்கமாய்ப் பரிஹாரங்களைக் கீழே குறிக்கிறேன்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தார், தேவையுள்ளவைகளைச் செய்யவேணும். அகில இந்தியாவிற்கும் ஒரு தினசரி ஸனாதன பேப்பர் ஆங்கிலத்திலும், ஒவ்வொரு தாய் (தேச) பாஷையில் ஒவ்வொன்றும் அத்தியாவசியம்,

இதற்கு மநுஷியஸஹாயமும் ஏராளமாகத்தேவை.

இவைகள் கிடைத்து தினசரி பேப்பர்கள் ஏற்படும் வரையில் இப்போதுள்ள ஆர்யதர்மம், தர்மராஜியா முதலிய ஸனாதனப்பேப்பர்களுக்கு ஸஹாயம் செய்து அவைகளில் ஸங்கத்தாரின் ஏற்பாடுகளையும் ஸுமாராகத்தேவையுள்ள திரவியஸஹாயத்தையும் வெளியிடுவதோடு அகில இந்தியாவிலுமுள்ள பிரபல தனிகஸனாதனிகள் மடாதிபதிகள் முதலியோர் உசிதப்படித் தகுந்த தொகை ஸஹாயம் செய்து அவர்கள் ஊர், பெயர் தொகை இவைகளையும் அதைப்பார்த்துக்கொண்டு இதரர்கள் கொடுக்கும் தொகைகளின் விபரங்களையும், அப்போதைக்கப்போது அன்றுவரையில் வசூலாகியிருக்கும் மொத்தத்தொகையையும் மேற்கண்டபேப்பர்களில் காணபித்துக்கொண்டு வந்தால் இவைஎல்லா ஸனாதனிகளையும் ஏற்படுத்திக்குடுக்கும்

இப்போதுள்ள ஸனாதனதர்மவிரோதசட்டங்களை ஒழிப்பதற்குச் செய்யப்பட்டுவருபவைகளும் செய்யவேண்டியவைகளுமாகிய விவரங்களைச் சுருக்கமாய் இப்போதுள்ள ஸனாதனப்பேப்பர்களில் காணவேணும். தினசரி பேப்பர்கள் ஏற்படவிட்டு மேற்கண்ட ஏற்பாடுகள் அவைகளிலிருந்து ஏற்படும் ஸாதநங்கள், திரவிய வசூல் சிலவு வைகையறுகள் இவைகளையும் ஸனாதனிகள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் விரிவாக எழுதவேணும்.

இச்சட்டங்கள் நிவர்த்தியாகவிட்டு இனி இப்படிப்பட்ட அனர்த்தம் வராமல் ஸனாதனதர்மம் ஸரியாக நடந்துவரவேண்டியதற்குள்ள ஏற்பாடுகளும் ஜனங்களுக்கு எடுத்து காட்டப்பட்டு வரவேணும்.

இச்சட்டங்களால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்குப் பிராய்சித்தங்களும் அறிவிக்கப்படவேணும்.

சாஸ்திரக்ஞர்களும் ஆஸ்திகர்களும் தனிகர்களும், இப்போதும் இப்பாரத பூமியில் ஏராளமாக இல்லாமற் போகவில்லையாகையால், அப்பேர்ப்பட்ட ஒவ்வொருவரும் கூட இக்காரியத்தையே தன் முக்கியமாகக் கொண்டு அவரவர்கள் அபிப்பிராயங்களை மேற்கண்ட பேப்பர்களில் வருத்தி வருவதோடு, தாங்களும் தங்கள் பந்துமித்திரர்களைகொண்டும் கூடியவரையில் எல்லா ஸஹாயங்களையும் ஏற்படுத்திக்குடுத்து இச்சட்டங்களை அதிலும் ஆணிவேராகிய சாரதாசட்டத்தை நிவர்த்திப்பித்து ஸனாதன தர்மத்தை புனருத்தாரணம் செய்யும் பலனையும் நித்ய சிரேயஸ்ஸையும் அடையவேணுமாயும் தர்மஸம்ரக்ஷகனை ஸர்வேசுவரன் இவைகளுக்கு ஸஹாயமாக இருந்து காரியசித்தி செய்து கொடுக்கவேணுமாயும் பிரார்த்திக்கிறேன்.

பி. எஸ். எஸ்.

காந்திஜி—காரியக்கமிட்டி பிளவு.

மூன்று தலைவர்களின் ராஜிநாமா?

சமீபத்தில் நடந்த காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டத்தில் இனி தேசீய காரியங்களில் காந்திஜியின் பொறுப்பை நீக்கி ஒரு தீர்மானம் செய்தது. அத்தீர்மானமானது காந்திஜீக்கும் காரியக் கமிட்டிக்கும் உள்ள ஒரு அபிப்பிராய பேதத்தைக் காட்டிற்று. காரியக்கமிட்டியில் அங்கம்வகிக்கும் ஸ்ரீ ராஜன் பாபு, ஸ்ரீ பஜாஜ் டாக்டர் கோஷ் என்ற மூன்று தலைவர்களும் மேற்கண்ட தீர்மானத்துக்கு தங்கள் அதிருப்தியை தெரிவித்து காரியக் கமிட்டியில் தங்கள் ஸ்தானங்களை ராஜீநாமா செய்து விட்டார்கள்.

“மராட்டா”

ஓர் மஹா பிரதிஷ்டை

தொட்டையாசாரியரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட, ஸ்ரீநிவாஸபுரமென்கிற ஆக்கூர் அக்கிரகாரத்தில், திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கும் லக்ஷ்மீநாராயணப் பெருமாள்ஸன்னிதியில் நாளது விக்கிரம௵ ஆனிமீ 25உ திங்கட்கிழமை அங்குரார்ப்பணித்து, 29உ வெள்ளிக்கிழமை காலை உதயாத் பூர்வம் 5 மணிக்கு மிதுன லக்னத்தில், ஸ்ரீ தாயார், ஆண்டாள், சக்ரத்தாழ்வான் இவர்களுடைய உத்ஸவ பிம்பங்களை நூதன மகாப்பிரதிஷ்டைபண்ணநிச்சயித்திருப்பதால் அவ்வைபவத்திற்கு மஹான்கள் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளவேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

ஆக்கூர் அக்கிரஹார வாசிகள்.

பிர்ம்மஸ்ரீ வரகவி ஸுப்ரமணிய பாரதி

தமிழ்நாட்டில் தமிழ் பாஷையில் தேர்ச்சி பெற்று, பாஷாபிவிருத்தியிலும் கல்வி அபிவிருத்தியிலும் நம் நாடு நலம் பெறுமாறு தமிழிற் பல நூல்களெழுதியும் பத்திரிகைகளில் அவ்வப்போது விஷயங்களெழுதியும் உபந்யாசங்கள் புரிந்தும் கடந்த நாற்பது வருஷ காலமாக உழைத்துவரும் பிர்ஹ்மஸ்ரீ வரகவி: திரு. அ. சுப்ரமண்ய பாரதியாரைப் பற்றித் தமிழ்மக்களில் அறியாதாரில்லையென்று கூறுவது மிகையாகாது.

இத்தகைய பெரியார் பெரம்பூருக்கு வந்த பத்து வருஷ காலத்திற்குள் பொது நல சம்பந்தமாய்ப் பல செயல்கள் புரிந்துளாரெனினும், அவைகளில் அவர்கள் பல மாணவர்கட்கு இலவசமாய்த் தமிழ்க்கல்வி போதித்து வருவதும் கடந்த 1933-ம் வருஷ முதல் கல்வி யபிவிர்த்தி சங்கம் என ஒரு சங்கம் நிறுவி அதற்குத் தலைமை வகித்து ஒவ்வொரு சனிக்கிழமையும் உபந்யாசம் புரிந்து வருவதும் போற்றத்தக்கனவாம்.

இத்தகைய பெரியார்க்கு நிகழும் விக்ரம வருஷம் ஆனி மாதம் 26உக்குச் சரியான ஜுலை மாதம் 9உயன்று சஷ்டியப்த பூர்த்தி நாள் வருகிறது. அந்த ஸுப தினத்தன்று ஏழைகட்கன்னமிடுவதென்றும் பாரதியாருக்கு ஏதேனும் பரிசு வழங்குவதென்றும் எம்முடைய நன்றியறிதலுக்கு அடையாளமாக ஒரு தீர்மானங்கொண்டு அதற்கான முயற்சிகள் செய்துவருகிறோம்.

தமிழ்நாட்டுத் தொண்டராகிய பாரதியாரிடம் நன் மதிப்புடைய கனதனவான்கள் எம்மோடு கலந்துகொண்டு இந்த நல்ல கைங்கர்யம் இனிது நிறைவேறத் தம் தமக்கியன்ற உதவிசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு:— உதவி செய்பவர் கீழேகண்ட விலாசத்திற்கு மணியார்டர் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

காரியதரிசிகள்.
கல்வியபிவிருத்தி சங்கம், பெரம்பூர்.

ஸி. ஆர். மௌனம்?

காந்திஜீயின் அஹிம்ஸையை காரியக் கமிட்டி கை நழுவ விட்டுவிட்டதையும், காங்கிரஸிலிருந்து காந்தீயம் விரட்டப்பட்டுவிட்டதையும்பற்றி நேருஜீ போன்ற தலைவர்கள் ஏதோதோ ஸமாதானம் பேசி காந்திக்கும், காங்கிரஸுக்கும் சண்டையில்லையென்று நிரூபிக்கப் பாடுபடுகிறார்கள். மற்ற தலைவர்களெல்லாம் இதில் முனைந்து நிற்கையில் காந்திஜீயின் வலது கையாகிய ஸி. ஆர். மட்டும் காந்தீய வீழ்ச்சியைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசாமல் மௌனம் சாதித்து வருவதின் மர்மமென்ன? இதற்குள் அவர் எவ்வளவோ பேசியிருப்பாரே!

இந்திய தேசீய விஷயங்கள்

(ஜூன் 20உ தொடர்ச்சி.)

ஒத்துழையாமை நம்தேசத்துக்கே அநேக ஞானிகளை விளைவிக்கத்தான் செய்யும். அது காந்திஜிக்கும் தெரியவில்லை. பிறதேசத்தை நம்பி வாழும் நாம் இன்றும் அதிக இடையூறுகளுக்கு ஆள்படவேண்டியது தான். ஆயினும் கொஞ்ச நாட்களுக்குத் தானே என்றும், ஒருவாறு ஸஹித்துக் கொண்டு விடுவார்கள் என்றும், எதிர்பார்த்து ஆரம்பித்தார்கள். ஒத்துழையாமையும் ஓர்வித யுத்தமே அல்லவா? யுத்தத்தில் ஸஹித்துக்கொவதுபோல் இதையும் ஸஹித்துக்கொள்வோள்வோம். யுத்தம் போலவே இதுவும் சிறிது காலம் தான் நடக்கும் என்று போதித்தார். அன்னிய தேசத்து துணிகளையும் நூலையும் பஹிஷ்கரிக்க ஏற்பாடு செய்வதில் அதை நம்பி பிழைக்கும் நம்மவரும் கஷ்டம் தான் அடைவார்கள். ஆயினும் சிறிது காலத்துக்குத்தான் என்று தெரிவித்து ஆரம்பித்தார்.

அவர் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. ஜனங்கள் ஏக காலத்தில் பலதுறைகளிலும் சேர்ந்தே ஒத்துழையாமையையனுஷ்டித்து ஸர்க்காருக்கு பதிலாக தாங்களே அரசை நடத்தவேண்டியது. அப்படிச்செய்யமுன்வரவில்லை. ஏன்? ஒத்துழைப்பதா ஒத்துழையாமலிருப்பதா? நினைத்தபடி நம்மால்செய்து முடிக்க முடியாது. நாமே செய்துகொண்ட பழக்கங்களுக்கு நாம் அடிமையாகி விடுகிறோம். நம் கைத்தொழில்களையும் நம் பாஷையையும் நம் இலக்கியங்களையும் நம் வாழ்க்கை முறையையும் நாம் கவனிக்காமல் நசுக்கவிட்டு அவைகளை பிறதேசத்தினிடமிருந்து பெறலுற்றோம். நமது மனப்பான்மை அன்னிய தேசத்தினரின் அடிமையாகவே நின்றுவிட்டது. ஸ்வதந்திரமாக வாழ மறுக்கிறது. அன்னிய ஸர்க்காரிடம் உத்யோகம் செய்து வாழவே விரும்புகிறது. பிழைக்க வேறு வழியும்புலப்படவில்லை.பழைய ஞானத்தை இழந்தோம். பழய தொழில்களை மறந்தோம். அவைகளை ஆதரிக்கச் சக்தியும் இல்லை. நமது மனஸ்தாபங்களை தீர்க்க பிறரை தேடிக்கொள்கிறோம். நமது தேசீயம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள நமக்கு துணிவு இல்லை.

ஆகையால் ஒத்துழையாமை இயக்கம் வெற்றிபெறவில்லை. வெற்றி பெற முடியாததால் காந்திஜீ வேறு நிர்மாண திட்டத்தை தொடங்கிவிட்டார். மறுபடியும் ஒத்துழையாமையில் இனி இறங்கக்கூடாது. பலாத்காரத்துக்கும் இடம் கொடுக்கலாகாது. கேவலம் நிர்மாணத்திலே ஈடுபடவேண்டும்

வெள்ளை அதிகாரவர்க்கத்துக்கு பதிலாக நம்மவர் அதிகாரம் புரிவது மட்டில் ஸ்வயராஜ்யமாகாது. சட்ட ஸபைகளையும் நிர்வாகத்தையும் நாம் நடத்துவது மட்டினுலா ஸ்வாராஜ்யம்? இல்லை. அந்யர் நம் மனப்பான்மையை வசீகரித்து, நம் தேசத்தையும் நம் மனோசக்தியையும் கொண்டு தங்கள் ஸ்வய நலத்தைவ்ருத்தி செய்து கொள்ளும் வரையில், ஸ்வயராஜ்யம் நமக்கு கிட்டினதாக கருத இடமில்லை. நமது தேவைகளுக்கு நாமம உத்பத்தி செய்து கொண்டு, நம் ஜனங்கள் பட்டினியின்றி போட்டியின்றி வாழ முற்படும் வரையில், நமக்கு ஸ்வயாராஜ்யம் கிடைத்துவிட்டதாக எண்ணக்கூடாது. ஆகையால் தேசீய புனர் நிர்மாணம் அவச்யமாகும். அதற்கு ஓர் தகுந்த திட்டம் வேண்டும்.

புதிய திட்டம் எவ்வாறு அமைக்கப்படவேண்டும்? புதிய நிர்மாணமா, திருத்தி அமைத்தலா? மேல் தேசத்தில் நடந்து வருவது போல் ஸமூகத்துக்காக தாய் உழைப்பதென்ற எண்ணமே இன்றி அவரவர்கள் இஷ்டப்படி தோன்றிய வேலைகளில் ஈடுபட்டு தோன்றிய பொழுது விட்டுவிட வஸதி அளித்தலா, அல்லது பழய நாகரீகத்தின் அழியாச் செல்வமான ஸமூகத்தின் ஹிதத்தைக் குறித்து அவரவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகளில் இடுபடுவதா? அன்ய ஆட்சி, அன்ய தொழிற்சாலைகள், அன்யபாஷை, அன்யநீதிஸ்தலங்கள். நமக்குள் பரஸ்பரத் வேஷங்கள் இவைகள் யாவும் சேர்ந்தே தவர்த்திக்கின்றவைகள். ஏதோ ஒன்றை மட்டில் விலக்கி அதற்கு பதிலாக நம்முடையதை புகுத்தி விடுவதால் ஸ்வயராஜ்யம் கிடைப்பதில்லை. ஆகையால் தான் கிடைக்கவுமில்லை. நமக்கு இனியும் ஏதோ ஒவ்வொன்றாக திருத்தி அமைத்துக் கொள்வோம் என்று முற்படுவது வீணேயாகும். அன்யர்களை அவதிப்படுத்துவதைக் காட்டிலும் அந்த முயற்சி நம்மையே அதிகமாக அவதிக்குள்ளாக்கும். நமக்குள் ஒற்றுமை குறையும். ஸ்வயாராஜ்யத்தை நாம் அமைத்துக் கொண்டால் தான் நமக்கு அன்ய ஆட்சியின் அநிதிகள் நீங்கும். நமது ஸமூக வாழ்வை எல்லாவகைகளிலும் சீர்திருத்தி அமைத்துக் கொள்வோமாயின் அரசாங்கமும் அதர்கது அநு குணமான அங்கமாக நம்முடையதாகவே ஆகிவிடும். இப்பொழுது நம்மிடம் இருந்துவரும் ஸ்தாபனங்களுடன் ஒத்துழைக்காமல் இருப்பதால் நமக்கு அனுகூலமா, ஒத்துழைத்து அவைகளை மாற்றி அமைத்துக்கொள்வதால் நமக்கு அனுகூலமா என்று கவனிக்கவேண்டும். காங்கிரஸ் கார்ய கமிட்டி திட்டம் முன் போலவே நாசம் செய்வதிலேயே முற்பட்டிருக்கிறதே ஒழிய திருத்தி அமைக்க துடங்கவில்லை. ஸ்வயராஜ்யத்தை பெறச்கூடியபடிதேசத்தை நிர்மாணம் செய்யமுற்படவில்லை. முன் ஒரு தடவை ஆரம்பித்து நிஷ்பலனாக முடிந்தமார்கங்களும் துறைகளும் கையாளப்படுகின்றனவே!

காங்கிரஸ் நிர்மாணதிட்டத்தில் முக்யமானது கதர்தான். இப்பொழுதும் கதர் என்றாலே ஸ்வதேசி என்றுகுஜராதி பாஷையில் பொருள்படும். கதரை எல்லோரும் ஆதரிக்கின்றனர். இதர கக்ஷிகளும் அதன் உபயோகத்தை மறுக்கவில்லை. ஆயினும் நமது நாட்டு பருத்தியே நமக்கு உபயோகத்துக்கு அகப்படவில்லையே- அன்யநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதை காங்கிரஸ் தடுக்க ஏற்பாடு செய்ததா? நமக்கு உடைகளுக்கு வேண்டிய அளவு என்ன ரகங்கள் எத்தனை என்றாவது கணக்கிட்டுப் பார்த்ததா அதை நூல் நூற்பவர்களுக்கு எளிதில் கிடைக்கவாவது வஸதிகள் ஏற்படுத்தப்பட்டனவா? அன்யநாடுகள் தங்கள் துணிவ்யாபாரம் குறைந்ததால் நம்மை பதிலுக்கு ஹிம்ஸிக்க முயலுமே அதறகு பிரதி விதானம் என்ன? கதர் உத்பத்தியை ஓர் தனித்தொழிலாக செய்ய முடியுமா? யாவரும் எளிதில் வாங்கக்கூடியவிலைக்கு விற்கமுடியுமா? அல்லது பொழுதுபோகாத வேளைக்கு தன் உபயோகத்துக்காக மட்டில் செய்து கொள்ளும் வேலைதானா இது? அப்படியானல் தேசத்துக்கு என்ன பலன்? வேலையில்லாத் திண்டாட்டம் குறையாது தேசத்தில் செலவு செய்யக்கூடிய சக்தியும் ஏறாது. வரிகள் கொடுமைதான் அதிகரிக்கும். இதர தொழில்கள் அபிவ்ருத்தி அடைந்தால்தான் கதர் இயக்கமும் வெற்றி பெறும்.

(தொடரும்)

ஸனாதன வித்யாலயத்தில் மாணவிகளின் ஓர் ஸம்பாஷணை.

ரஞ்சிதம்:- உங்களுடைய ஸனாதன வித்யாலயத்தின் நோக்கமென்ன?

முத்துமீனாக்ஷி:- எங்கள் வித்யாலயத்தின் நோக்கம் தற்காலம் நமது தேசம் பூர்விக ஆசாரங்களை விட்டு அதிலும் நமது ஸ்திரீ சமூகமும் கெட்டுவரும் நிலைமையை மாற்றுவதே.

ரஞ்சி:— அவ்விதம் ஸ்திரீ சமூகத்திற்கு என்ன ஆபத்து வந்துவிட்டது. அதை உங்கள் வித்யாலயம் எவ்விதம் மாற்றிவிடும்.

முத்து:— அதுவா கேள்! நீ இப்போது மீனாக்ஷி வித்யாசாலை, மங்களபுரம், கேப்ரன் ஹால், முதலானபள்ளிக்கூடங்களில் உள்ள குழந்தைகளின் பழக்கம் உனக்கு இருந்து இருக்குமென்றுஎண்ணுகிறேன். அவ்விடங்களில் உள்ள குழந்தைகள் ஜாதி தெரியாமலும், டான்ஸ் முதலான ஆட்டப்பாட்டங்களும், அனாசாரமும் சர்வ ஜாதியார்களுடனும் கலந்து உண்பது முதலான கெட்ட பழக்கங்களை போக்கி நம்முடைய ஜாதி தர்மங்களையும் ஒழுக்கமான நடவடிக்கையும் கற்பிக்க வேண்டியதே இதன் நோக்கம்

ரஞ்சி:— உங்கள் பள்ளிக்கூடத்திலும் அநேக கொண்டாட்டங்கள் நடந்து இருப்பதாகவும் அதிலும் டான்ஸ், சம்பாஷணை, (டைலாக்) இதுகள் நடந்ததாக கேள்விப்பட்டதாலல்வோ நான் அவிடம் வந்தேன்.

முத்து:— ஆம்மாம். நீ தெரிந்து கொண்டதை நன்றாய் தெரிந்துகொள்ள வில்லை. அதாவது அதன்நோக்கம் என்னவென்றால் அவ்விதம் டைலாக் முதலானது போட்டு அதைக்கண்டிக்கும் நிலைமையில் உங்களை போன்றவர்களுக்கு அதில் வெறுப்புஉண்டு பண்ணி பண்டை பெருமையுடன் கூடிய சனாதன வித்யாலயத்தின் கட்டாய படிப்பு பெண்களுக்கும் ஏற்பட்டிருக்கும் முறையில் பெண்களை படியாமல் வைத்திருக்க முடியாத நிலைமையில் சதா சர்வ காலமும் சனாதன தர்மத்திற்கே உடல், பொருள், ஆவியை அர்பணம் செய்து வரும் நமது வர்ணாச்ரம சுயராஜ்ய சங்க காரியகமிட்டி அத்யக்ஷகர் ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்கள் தியாகத்தால் நடந்து வருகிறது.

ரஞ்சி:— அப்படியா! ரொம்ப சந்தோஷம். உங்களுடைய பள்ளிக்கூடத்தில் என் சம்பளம் இல்லை. பள்ளிக்கூடமோ பெரிதாகி விட்டதே. குறைந்தது உபாத்தியாயர்களும் பத்து, பனிரண்டு பேர்கள் இருக்கிறார்கள். குழந்தைகளும் நானூறுக்கு மேல் நானூற்றைம்பது குழந்தைகள் படிக்கிறார்கள். இவ்வளவுக்கும் அய்யர் ஒருவர் எவ்வளவு காலம் உதவி செய்வார்கள்.

முத்து:— அதுதான் எனக்கு கூட ஒரு யோஜனை உண்டு. ஆனால் அவர் அதை யோஜனை செய்யாமல் ஆரம்பிக்கமாட்டார். ஒரு சமயம் இவிடம் ஹைகோர்ட் ஜெட்ஜி மகாகனம் பொருந்திய கிருஷ்ணசாமிய்யங்கார் வந்த ஸமயம் வித்யாலயத்திற்குஅழைத்து உபசாரம் செய்தார்கள். அப்போது இப்போது நடந்து வருகிற வித்யாலய் கட்டடத்தையே வாங்கி வைப்பதாககூடச் சொல்லி இருக்கிறார்கள். அப்போது இந்த வித்யாலயமே சனாதன சர்வகலாசாலையாய் கூடிய சீக்கிரம் ஈச்வரனது கிருபையால் விளங்கப்போவதாகஎன்னுடைய நிச்சயம்.

ரஞ்சி:— ஆமாம்மா எனக்கும் உங்கள் வித்யாலயத்தில் நுழைந்தவுடனே ஓர் வித உணர்ச்சி உண்டாயிருக்கிறது. அதாவது இது இந்தகாலத்திற்கு ஈஸ்வர பிரேரேபணையின்பேரிலேயே ஆரம்பம் செய்யப்பட்டதாகவும் கருதுகிறேன்.

(ஜி. எ. வி.)

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியமருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிருர்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

நாகூர்

ஜெய பிரார்த்தனை

நாகூர் மேல் அக்கிரகாரத்தில் ஆனரரி மாஜிஸ்திரேட்டு ஸ்ரீ டி. வீராசாமிய்யரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ பஜனை மடத்தில் 29—6—40 சனிக்கிழமை ராத்திரி 7 மணி முதல் 10 மணி வரையில் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி ஸ்ரீ கோபால கிருஷ்ணமூர்த்தியிடம் இப்போது நடக்கும் யுத்தம் நமது சக்கிரவர்த்தி அவர்களுக்கு பூர்ண வெற்றியளிக்கவேணுமாய் பிரார்த்தித்தும் நாகூர் சப்ரிஜிஸ்டரார் ஸ்ரீ ஆர். சீனிவாசகோபாலாசாரியார் அவர்களால் நமது ராஜாங்கத்தின் பெருமையை வெகு அழகாய் உபன்யசித்தும் யுத்தம் ஜெயமாகபிரார்த்தித்தும் பஜனை அர்ச்சனைகள் நடத்தி தீபாருதனை செய்து விநியோகமும் கொடுக்கப்பட்டும். எல்லோருலும பிரார்த்தனைகளும் செய்துகொள்ளபட்டது.

ந. நி.

ஸ்ரீ விநாயகர் வாசகசாலை,

மாதளம் பேட்டைத்தெரு
கும்பகோணம்

கும்பகோணம் மாதளம் பேட்டைத் தெருவிலுள்ள ஸ்ரீ விநாயகர் வாசகசாலையின் ஆதரவில் 29—6—40 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு ஸ்ரீமான் கணபதி பிள்ளை அவர்களின் தலைமையில் டவுன் ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ எம், ராமராவ் பி. ஏ. அவர்களால் "இராமாயணம்" என்ற விஷயத்தைப்பற்றி அரியதோர் பிரஸங்கம் செய்யப்பட்டது. சிறுமாணவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்படி ராமாயணகாலத்து நாகரீகத்தைப்பற்றியும் இராம லக்ஷ்மணர்களின் சகோதர பாவத்தைப்பற்றியும் "அண்ணனுக்கு எட்டாதது தம்பிக்கு எட்டும்" என்ற பழமொழியை இராமாயணத்தில் ஸமன்வயம் செய்தும் ஸ்ரீமான் ராமராவ் பல மேற்கோள்களுடன் அரியவிஷயங்களை எடுத்துரைத்தார் அச்சமயம் அவருக்கு ஓர் வரவேற்புப்பத்திரமும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. தலைவர் முடிவுரையின் பின்னர், ஏ. ஜி. ஸ்ரீனிவாஸரூவ் தலைவர், உபந்யாஸகர் இவ்விருவரின் பெயர்களுக்கும் வாசாலையின் பெயர் உபந்யாஸ விஷயம் இவ்விரண்டுக்கும் முறையே உள்ள பொருத்தத்தைவிளக்கி வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது எனக்காரியதரிசி அறிவிக்கிருர்.

உ

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மடம் சிஷ்யகோடிகளுக்குக் கொடுத்த

ஆக்ஞா ஸ்ரீமுகம் பிரகாரம்:

திருவாரூர்
ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்கும்
ஸ்ரீவல்மிகநாதர் முதல் பஞ்சமூர்த்திகளுக்கும்
136 குடம் கங்காதீர்த்தம் பிரயாகையிலிருந்து தருவித்து மஹாஅபிஷேகத்தை

நாளது விக்ரமஸு ஆனிமீ 22உ (5—7—40) முதல் ஆனிமீ 32உதேதி (15—7—40) ஸோமவாரம் முடிய, 136 வைதீகர்களைகொண்டு ஸ்ரீமஹா ருத்ர பாராயணம் செய்வித்து தக்ஷிணாயனபுண்யகாலம் ஸமயம் அபிஷேகம் செய்விப்பதென்றும் இந்த 12 நாளிலும் அன்னதானம் செய்வதென்றும் தீர்மானித்திருப்பதாலும், இந்த கைங்கர்யமானது மஹாஜனங்களின் க்ஷேமத்தையும் துர்பிக்ஷம் நீங்கவும், ராஜாங்க க்ஷேமத்தையும் உத்தேசித்து நடத்தப்படுகிறது. இந்தவிதமான கைங்கர்யம் இதற்கு முன் ஒருபோதும் நடந்ததாகக்காணப்படவில்லை. ஒருசமயம் இராஜாக்களால் நடத்திவைக்கப்பட்டிருக்கலாமோ தெரியவில்லை இதற்கு ஏராளமான பொருள் தேவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே தர்மம் என்பது கேட்டும், கேளாமல்தானகவே செய்ய முன்வருவதே சுத்தமான தர்மமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஜெகத்தில் தர்மிஷ்டர்கள் ஏராளம் ஒவ்வொருவரையும் அணுகி நேரில் போய் தெரிவித்து கேட்பதென்பது சிரமமான கார்யம் ஆகையால் கேளாமல் செய்வதே உத்தமம் மென்பதைஅனுஸரித்து தங்களால் இயன்றதை பணமாகவோ அன்னதானத்துக்குரியஸ மக்கிரியைகளாகவோ அடியில்கண்ட விலாசத்துக்கு நேரிலோ மனுவியாள மணிஆர்டர் மூலமாகவோ அனுப்பியும் கூட இருந்து இந்த தர்மதை நடத்திவைத்து கிருதார்த்தர்களாகவும் இசுவர அனுக்றஹத்தை அடையவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விலாஸம்

பழனிசிவன்,
9நெ. ஸன்னதித் தெரு திருவாரூர். S.I.R.

தார்மிக யுவ சங்கமென்ற தர்ம ஸம்ரக்ஷண வாலிபர் சங்கத்தின் மஹா ஸபைக்கூட்டம்

ராமேஸ்வரம்

சப் கமிட்டிகள் நியமனம்

1940 ஸு ஜூன் மீ 26உ மாலை 6-30 மணிக்கு சங்ககாரியாலயத்தில் ஸ்ரீ ஆர். கே பட்டாபிராம சாஸ்திரியளவர்கள் அக்கிராஸனத்தின் கீழ்நடைபெற்று அடியில்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்கள்

இந்த சங்கத்தின் சந்தாதுகைகள் வசூல் செய்யவும் நன்கொடை முதலியது வாங்கவும் ஸ்ரீ பி. மகாதேவ சாஸ்திரியளவர்களைத் தலைவராகக்கொண்ட மூவர் அடங்கிய கமிட்டி ஒன்று நியமித்தும் ஸ்திரவார பஜனை ஏகாதசியில் புராண ப்ரவசனம் முதலிய ஏற்பாடுகளை செய்யவும் ஸ்ரீ எஸ். சுந்தரமய்யரவர்களைத்தலைவராகக்கொண்ட ஐவர் அடங்கிய கமிட்டி ஒன்று நியமிக்கவும் சங்கக்கட்டிட வாடகைகளை கொடுத்துதவ நன்கொடையாளர்கள் நியமிக்கப்பட்டும் முடிவில் இச்சங்கத்தின் ஆடினெரி கிளார்க்கு ஸ்ரீ வை. முத்துசுப்பிரமண்ய சாஸ்திரியள் அவர்கள் நம் ஸனாதன தர்மங்களை ஆதரித்து வரக்கூடிய ஆர்யதர்மம் என்ற பத்திரிகையை எல்லோரும் ஆதரிக்கவேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறியும் வந்தனோபசாரம் கூறியும் கூட்டம் இனிது முடிந்தது. இச்சங்கத்தின் அடுத்த மஹாஸபைக்கூட்டம் ஜூலை மீ முதல் வாரத்தில் நடைபெறும்.

கோடிலிங்கம் சங்கர சாஸ்திரிகள்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar and S, Kalyanasundaram,